2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. பழனிச்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

346—

பேருந்து வசதி

***24729—திரு. ஏ. பழனிச்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் இருந்து பல்லடம், தாராபுரம், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் வழியாக வடமதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட காரம் விடியும் முன், வரம் தரும் அன்னை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க 30-9-2012 அன்று முதல் கோயம்புத்தூரிலிருந்து பல்லடம், தாராபுரம், ஒட்டன்சத்திரம் மற்றும் வேடசந்தூர் வழியாக வடமதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். காவேரி, முல்லைப் பெரியாறு பிரச்சினைகளிலே பெற்ற வெற்றி மேல் வெற்றி வந்து தமிழக மக்களைச் சேரும் அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

வரம் வேண்டி தவம் இருந்தால்தான் ஆண்டவனே அருள் தருவான். ஆனால், நினைத்த உடனே நிறைவேற்றித் தருபவர்தான் எங்களின் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன் அடிப்படையிலே, இந்த வினாவைக் கேட்டு, அவையில் எடுத்துக்கொள்ளும் முன்பே வடமதுரை-கோயம்புத்தூர் இடையே பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்து, அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதேபோன்று, கரூர் மற்றும் திண்டுக்கல் நகருக்கு குஜிலியம்பாறை வழியாக கூடுதல் பேருந்து வசதியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் நலன் கருதி, திண்டுக்கல் மண்டலத்தில் மட்டும் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக 23 புதிய வழித்தடங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் பேருந்துகள் கொடியசைத்து துவக்கி வைக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற வழித்தடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கேற்ப

2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னையில் பெரம்பூர் தொகுதிக்கு உள்ளிட்ட பகுதியில், கண்ணதாசன் நகர், கொடுங்கையூர், முத்தமிழ் நகர், எம்.ஆர். நகர் போன்ற பகுதியில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட, அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று பிழைக்கிற ஏழை மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலிருந்து பெரம்பூர் இரயில் நிலையம் வழியாக, எழும்பூர் இரயில் நிலையம் மற்றும் இதனுக்கு பேருந்து வசதி கிடையாது. எழும்பூர் இரயில் நிலையம் எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, இத்தனை காலம் பேருந்து வசதி இல்லாதிருந்த இந்தக் குறையைப் போக்கும் வகையில் அந்தப் பகுதியிலிருந்து எழும்பூர் இரயில் நிலையத்திற்கு, பெரம்பூர் இரயில் நிலையம் வழியாகப் பேருந்து விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரை, பெரிய பேருந்துகள் செல்ல முடியாத இடங்களிலெல்லாம் 100 மினி பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, நிதிகளைக் கொடுத்து, இன்று அதற்குண்டான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் திருக்கரங்களால் இந்த மினி பேருந்துகள் சென்னை மக்களுடைய பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த வழித்தடங்களில் உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, உரிய பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

347—

ஆயுர்வேத மற்றும் யோகாசனப் பிரிவுகள்

***19893—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் ஆயுர்வேத மற்றும் யோகாசனப் பிரிவுகளைத் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் ஆயுர்வேதப் பிரிவுகள் மற்றும் யோகாசனப் பிரிவுகளைத் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இன்றையதினம், தொழிலாளர்களுடைய விடிவெள்ளியாய், தொழிலாளர்களின் குடும்ப விளக்காய் நிலைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே, மே தினத்தைக் கொண்டாடுகின்ற வகையிலே, இன்றைக்குத் தொழிலாளிகளுக்கு வாரி, வாரி வழங்கக்கூடிய கொடை வள்ளலாக அம்மா அவர்கள்